**<u>இடங்கணசாலை நகராட்சி</u>**

**<u>தீர்மான நகல்</u>**

**<u>சாதாரணக் கூட்டம்</u>**

இடங்கணசாலை நகராட்சியில் சாதாரணக் கூட்டம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் தேததி திங்கட்கிழமை பிறப்கல் 01.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கை.

**முன்னிலை பி.ஜி.கமலகண்ணன்,**
**நகர்மன்ற தலைவர்,**
**இடங்கணசாலை நகராட்சி.**

இடங்கணசாலை நகராட்சியில் சாதாரணக் கூட்டம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடிவடிக்கைகளில் நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அவர்கள் இந்நகர்மன்ற தலைவரிடம் சிறப்பு தீர்மானமாக நிறைவேற்றும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க இடங்கணசாலை நகராட்சி பேரூராட்சியாக இருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இடங்கணசாலை நகராட்சியானது 24.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நகராட்சியாகும். இதன் மக்கள் தொகை 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 33,245 பேர் வசிக்கின்றனர்.

இடங்கணசாலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14,16,21 காடையாம்பட்டி பெரிய ஏரி சர்வே எண்.217, 220–இல் சுமார் 80.00 ஏக்கர் பரப்பளவு கொண்ட காடையாம்பட்டி பெரிய ஏரிக்கு சித்தர் கோவில் கஞ்சமலையில் இருந்து இரண்டு ஓடையின் மூலமாக மழைநீர் வந்து கொண்டிருந்தது. ஆனால், தற்போது ஓடைகளின் மூலம் தண்ணீர் வராத காரணத்தினால் பெரிய ஏரியினை சுற்றியுள்ள ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணற்றின் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது மற்றும் குடிநீர் ஆதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இடங்கணசாலை நகராட்சிக்கு அருகில் உள்ள ஏகாபுரம், பாப்பம்பாடி ஏரி மற்றும் தெசவிளக்கு கசப்பேரி ஆகிய ஏரிகளுக்கு காவிரி உபரிநீர் வருகிறது.

எனவே, இந்நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி காடையாம்பட்டி ஏரியினை தூர்வாரி ஆழப்படுத்தி சீமை கருவேல மரங்களை அகற்றி கரையை பலப்படுத்தி காவிரி உபரிநீர் மூலம் மேற்கண்ட காடையாம்பட்டி பெரிய ஏரியினை நிரப்பி சுற்றியுள்ள விவசாயம் மற்றும் நிலத்தடி நீரை மேம்படுத்த கோரி பொதுப்பணி துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள இந்நகர்மன்றம் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**சிறப்பு தீர்மானம் எண்.2, நாள்.30/12/2024.**

அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) பி.ஜி.கமலகண்ணன்,
நகர்மன்ற தலைவர்,
இடங்கணசாலை நகராட்சி,
சேலம் மாவட்டம்.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
இடங்கணசாலை நகராட்சி,
சேலம் மாவட்டம்.